செ.வெ. எண்: 451 நாள்: 30–07–2012

# செய்திக் குறிப்பு

தன்னைத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்களின் குறைகளை அறிந்து அது குறித்து சட்டமன்றத்தில் குரலெழுப்பி அரசிடமிருந்து அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் வாய்ப்புக்களையும் பெற்றுத் தர வேண்டிய ஒரு சட்டமன்ற உறுப்பினரின் அடிப்படைக் கடமையைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் சட்டமன்றத்திற்கே வராமல் அதைப் புறக்கணித்த மு.க.ஸ்டாலின், மழைக் காலத்தில் திடீரெனத் தலை காட்டும் காளானைப் போல் தனது தொகுதிப் பக்கம் தலைகாட்டி, தனது தொகுதியில் குடிநீரில் கழிவுநீர் கலப்பதாகவும் அதை உடனடியாகத் தடுக்கவில்லையென்றால் போராட்டம் நடத்துவேன் என்றும் தெரிவித்தவர், தற்போது ஆகஸ்டு திங்கள் 1ம் தேதி அன்று போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளார்.

சென்னையில் குறிப்பாக, சேத்துப்பட்டு பகுதியில் பூபதிநகர், ஓசோன்குளம் குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு, மற்றும் புல்லாபுரம் ஆகிய பகுதிகளைச் சார்ந்த மக்கள், வாந்தி–பேதி நோயால் பாதிக்கப்பட்டு இருப்பதாக ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தில் அரசுக்கு தகவல் கிடைக்கப் பெற்றது. உடனடியாக பாதிப்பு ஏற்பட்டுள்ள இப்பகுதிகளில் தடுப்பு மற்றும் சிகிச்சை நடவடிக்கைகளையும், ஏனைய பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இந்த ஆணைப்படி சென்னை மாநகராட்சியும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமும் தடுப்பு மற்றும் சிகிச்சை நடவடிக்கைகளையும் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளையும் முழு வீச்சில் மேற்கொண்டு செயலாற்றிட ஒரு செயல் திட்டத்தை உடனடியாக மேற்கொண்டன.

இந்த செயல்திட்டத்தின்படி,

- பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் சென்னை மாநகராட்சி மூலம் ஒட்டுமொத்த தூய்மைப்படுத்தும் பணி முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- பாதிப்புக்குள்ளானவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உடனடியாக சிகிச்சை வழங்கிட சென்னை மாநகராட்சி சார்பில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 380 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு முன்னெச்சரிக்கை சிகிச்சை அளிக்கப்பட்டது.
- பாதிப்புக்குள்ளானவர்களுக்கு சிறந்த மருத்துவ சிகிச்சை வழங்கிட சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனை உட்பட அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக செய்யப்பட்டுள்ளன. சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் கூடுதலாக 10 மருத்துவர்களும் 40 மருத்துவ உதவியாளர்களும் உள்ளிட்ட ஒரு சிறப்புக் குழு அமைத்து நோயாளிகளுக்கு 24 மணி நேரமும் சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- ஓட்டல்கள், சிற்றுண்டி உணவகங்கள் மற்றும் சாலையோர உணவகங்கள் பரிசோதிக்கப்பட்டு தரமான உணவு வழங்கப்பட்டு வருகின்றதா என்பதை சென்னை மாநகராட்சி கண்காணித்து வருகின்றது. இதுவரையில் 150 உணவகங்களுக்கு சுகாதார சீர்கேடுகளைக் களைந்திட தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் மிகவும் மோசமான 10 உணவகங்கள் மூடப்பட்டுள்ளன.
- ஈக்களை கட்டுப்படுத்திட மாநகராட்சி முழுவதும் 220 குழுக்கள் அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிக்காக சென்னை மாநகராட்சியுடன் புதிதாக

இணைந்த பகுதிகளில் அமைந்துள்ள மண்டலங்களில், 313 கூடுதல் ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

- பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு குளோரின் மாத்திரைகள் தாராளமாக வழங்கப்படுகின்றன. இதுவரையில் 1,10,000 மாத்திரைகள் வழங்கப்பட்டு சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.
- பாதிக்கப்பட்ட பகுதி மட்டுமல்லாமல், சென்னை மாநகர் முழுவதும் பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரில் தேவையான அளவு குளோரின் இருப்பதை தினமும் காலை, மாலை இருவேளையும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும், சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையும் இணைந்து கண்காணித்து வருகிறது. சென்னை மாநகரின் 200 வார்டுகளிலும், இருதுறைகளும் இணைந்து தினமும் சுமார் 2500க்கும் மேற்பட்ட இடங்களில் குடிநீரில் குளோரின் அளவை பரிசோதித்து தரம் உறுதி செய்யப்படுகிறது.
- சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர், பொறியியல் இயக்குநர், மூன்று தலைமைப் பொறியாளர்கள் மற்றும் ஐந்து கண்காணிப்புப் பொறியாளர்கள் ஆகியோர் அடங்கிய உயர்மட்டக் குழு குடிநீரின் தரத்தைக் கண்காணித்து வருகிறது.
- சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் அனைத்து பகுதிப் பொறியாளர்களும் துணை பகுதிப் பொறியாளர்களும் உதவிப் பொறியாளர்களும் காலை 6.30 மணிக்கு அவரவர் பகுதிக்குச் சென்று குடிநீரின் தரத்தினைக் கண்காணித்து வருகின்றனர். அதேபோல் மாலையிலும் குடிநீரின் தரத்தினைக் கண்காணித்து குடிநீரில் கலந்துள்ள குளோரின் அளவை அவர்கள் சரி பார்த்து வருகின்றனர். குறிப்பாக குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் அமைந்துள்ள பகுதிகளிலும், பொருளாதார நிலையில் நலிவுற்ற மக்கள் வாழும் குடிசைப் பகுதிகளிலும் பொதுக் குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீரில் குறிப்பிட்ட அளவு குளோரின் உள்ளதை 100 விழுக்காடு உறுதிப்படுத்தி வருகிறார்கள்.

- சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கீழ்நிலை மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளையும் மாநகரின் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து சின்டெக்ஸ் குடிநீர் தொட்டிகளையும் முறையாக தூய்மைப்படுத்தி வந்தபோதிலும் தற்போது சிறப்புக் கவனம் செலுத்தி தீவிர தூய்மைப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் தொடர்பாக பொதுமக்களின் புகார்களை உடனுக்குடன் சரி செய்திட, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய தலைமை அலுவலகத்தில் 24 மணி நேர புகார்ப் பிரிவு வாரிய பொது மேலாளர் தலைமையில் தீவிரமாக இயங்கி வருகிறது.

இவை மட்டுமன்றி, சென்னை நகரில் பெருகி வரும் திடக்கழிவுகளை கருத்திற்கொண்டு அதனை அகற்றி மேலாண்மை செய்திட முன் எப்போதும் இல்லாத வகையில் ஒரே சமயத்தில் ரூ.42 கோடி மதிப்பில் 43 பெரிய காம்பாக்டர்கள், 45 சிறிய காம்பாக்டர்கள், 15 லாரிகள் மற்றும் இதர வாகனங்கள் கொள்முதல் செய்ய ஆணைகள் வழங்கப்பட்டு வாகனங்கள் பெறப்பட்டு வருகின்றன.

இந்நடவடிக்கைகள் எவ்வித தொய்வுமின்றி தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருவதை சென்னை மாநகராட்சி ஆணையரும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநரும் தனிக்கவனம் செலுத்தி மேற்பார்வையிட்டு வருகின்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும், பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதிப்படுத்தவும், 23.07.2012 மற்றும் 24.07.2012 ஆகிய நாட்களில் அவசர ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்களில் என்னுடன்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமை செயலாளர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர், சென்னை மாநகராட்சி ஆணையர் முதலான உயர் அலுவலர்கள் பங்கேற்றனர். இக்கூட்டங்களில், சென்னை மாநகர தெருக்களில் சேருகின்ற குப்பைகளை உடனுக்குடன் அகற்றிடவும், ஈ மற்றும் கொசுக்களின் பெருக்கத்தைத் தடுத்து அவற்றை அழித்திடவும், தூய்மையான – பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 24.07.2012, 25.07.2012, மற்றும் 26.07.2012 ஆகிய நாட்களில், மண்டல அளவில் ஆய்வுக்கூட்டங்கள் நடத்தியதுடன் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுகளின்போது என்னுடன் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களும், வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள், மண்டல குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோரும் பங்கேற்று, தடுப்பு மற்றும் சிகிச்சை நடவடிக்கைகளை தீவிரமாகவும் அதே நேரத்தில் துரிதமாகவும் நல்லமுறையிலும் மேற்கொள்ள தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக தற்போது நிலைமை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. ஆனால், மு.க.ஸ்டாலின் அரசியல் உள்நோக்கத்துடன் மக்கள் மத்தியில் பீதியை கிளப்பும் வகையில் கருத்துக்களை அள்ளித் தெளித்திருக்கிறார். ஏதோ அவர்களது காலத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்ததாகவும், அப்படிப்பட்ட எந்த நடவடிக்கையும் இப்போது இல்லை என்பதாகவும் கூறி, அதனால் தான் இந்த கோளாறு என்றும் கூறியிருக்கிறார்.

உண்மையில் அவர்களது காலத்தில் ஒழுங்காக நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த பிரச்சினை ஏன் வரப்போகிறது? கருணாநிதி

முதலமைச்சராகவும், மு.க.ஸ்டாலின் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் ஆட்சி செய்த ஐந்தாண்டு காலத்திலும், இந்த ஜூன்–ஜூலை மாதங்களில் சென்னை மாநகரில் ஒவ்வொரு ஆண்டும் வாந்தி பேதி நோய் பாதிப்பு தவறாமல் வந்திருக்கிறது. **திமுக ஆட்சிக்காலத்தில், இதே ஜூலை மாதத்தில், 2007 ஆம் ஆண்டில் 795 நபர்கள் வாந்தி பேதி நோய்க்கு ஆளானதுடன் 254 நபர்கள் காலராவால் பாதிக்கப்பட்டனர். 2008 ஆம் ஆண்டில் 269 நபர்கள் வாந்தி பேதி நோயாலும் 59 நபர்கள் காலராவாலும் பாதிக்கப்பட்டனர். 2009 ஆம் ஆண்டில் 291 நபர்கள் வாந்தி பேதி நோயாலும் 36 நபர்கள் காலரா நோயாலும் பாதிக்கப்பட்டனர். 2010 ஆம் ஆண்டில் 310 நபர்கள் வாந்தி பேதி நோயாலும் 80 நபர்கள் காலராவாலும் பாதிக்கப்பட்டனர். அந்த கால கட்டத்தில் சென்னை மாநகரின் பரப்பளவு 174 ச.கி.மீ மட்டுமே. ஆனால் தற்போது புதிதாக இணைந்த பகுதிகளையும் சேர்த்து மொத்தம் 426 ச.கி.மீ பரப்பளவை சென்னை மாநகர் உள்ளடக்கியுள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.**

இப்படி ஆண்டுதோறும் பாதிப்பு ஏற்பட்டதே, அதனை சரிப்படுத்த கடந்த திமுக ஆட்சி மேற்கொண்ட நடவடிக்கை தான் என்ன? இதனை நிரந்தரமாக தடுக்க ஏதாவது திட்டம் செயல்படுத்தப்பட்டதா என்றால் கிடையாது.

ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இனி எந்த ஒரு காலத்திலும் சென்னை நகர மக்கள் இதை போன்றதொரு பிரச்சினையை சந்திக்கக்கூடாது என்ற தொலை நோக்கு பார்வையுடன் சென்னை மாநகரின் அனைத்து உட்கட்டமைப்புகளையும் மேம்படுத்தும் வகையில் ‘‘சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம்’’ எனும் முன்னோடித் திட்டத்தை செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்று இரண்டு நிதியாண்டுகளில் ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அத்துடன் சென்னை மாநகரில் உள்ள கூவம்நதி, பக்கிங்காம் கால்வாய் மற்றும் அடையார் ஆகிய நீர்வழிகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கலக்கும் 337 இடங்களில், அக்கழிவுநீர் ஆறுகளில் கலப்பதற்கு முன்னர் தடுத்து அதனை சுத்திகரித்து, பின்னர் நீர்வழிகளில் கலக்குமாறு செய்வதற்கு ரூ.300 கோடி மதிப்பில் திட்டங்கள் நிறைவேற்ற உத்தரவிட்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி

அம்மா அவர்கள், முதற்கட்டமாக 150 கோடி ரூபாயை சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கு விடுவிக்க ஆணையிட்டுள்ளார்கள்.

சென்னையில் வாந்தி பேதி நோயால் பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து தற்போது 30 நபர்கள் மட்டுமே மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இன்று (30.07.2012) 7 நபர்கள் மட்டுமே சிகிச்சை பெற மருத்துவமனையை அணுகி உள்ளனர். இவர்கள் அஞ்சும்படியான நிலையில் இல்லாத போதிலும் மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. இவர்கள் அனைவரது நிலைமையும் மிகவும் திருப்திகரமாக உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு மற்றும் சிகிச்சை நடவடிக்கைகளின் காரணமாகவே இவ்வளவு விரைவாக இயல்பு நிலை மீள பெறப்பட்டுள்ளது. ஆனால் இதையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களது தலைமையிலான அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளைப் பற்றி அரசியல் உள்நோக்கம் ஒன்றை மட்டுமே மனதில் வைத்து விமர்சிப்பதுடன், சென்னை மாநகரை வாந்தி பேதி நோய் எந்த காலத்திலும் அண்டாதவாறு தொலை நோக்குப் பார்வையுடன் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்து வரும் நடவடிக்கைகளை முழுமையாக மறைத்து விட்டு அரசு எதுவுமே செய்யவில்லை என்ற பிரமையை ஏற்படுத்தும் நோக்குடன் தேவையற்ற பீதியை மக்கள் மத்தியில் கிளப்பி அதில் குளிர் காயலாம் என்று மு.க.ஸ்டாலின் நினைத்தால் அதை ஒருபோதும் மக்கள் ஏற்கமாட்டார்கள்.

கே.பி.முனுசாமி,
நகராட்சி நிர்வாகம் மற்றும்
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**